TNPSCJOB



# செலக்சன்
# 6 சமூக அறிவியல்
# மூன்றாம் பருவம்
# 5 in 1

## வரலாறு

## அலகு 1. பண்டைக் காலத் தமிழகத்தில் சமூகமும்பண்பாடும் : சங்க காலம்

| சான்றுகள் | மனவரைபடம் |
|---|---|
| கல்வெட்டுக்கள் | ஹதிகும்பா புகளூர் பேராணை |
| செப்புப் பட்டயங்கள் | வேள்விக்குடி சின்னமனூர் |
| நாணயங்கள் | சேர, சோழ, பாண்டியர் |
| நினைவுச் சின்னம் | நடுகற்கள் |
| அகழ்வாய்வு | ஆதிச்ச நல்லூர், அரிக்கமேடு |
| இலக்கியம் | தொல்காப்பியம், எட்டுத்தொகை |
| அயல்நாட்டவர் குறிப்பு | மெகஸ்தனிஸின் இண்டிகா |
| கால அளவு | கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை |
| தமிழக பரப்பு | வடக்கே வேங்கடம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை |
| காலம் | இரும்புக் காலம் |
| அரசுமுறை | முடியாட்சி |
| ஆட்சி புரிந்த அரசவம்சங்கள் | சேரர், சோழர், பாண்டியர் |

### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. தமிழகத்தில் பத்தினி வழிபாட்டை அறிமுகம் செய்தவர் ...............**

அ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ) சேரன் செங்குட்டுவன்
இ) இளங்கோ அடிகள் ஈ) முடத்திருமாறன்

**விடை :ஆ) சேரன் செங்குட்டுவன்**

TNPSCJOB



**2.கீழ்க்காணும் அரச வம்சங்களில் எது சங்க காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இல்லை**

அ) பாண்டியர் ஆ) சோழர்

இ) பல்லவர் ஈ) சேரர் **விடை : இ) பல்லவர்**

**3. பாண்டியர் ஆட்சிக்குப் பின் ஆட்சிக்கு வந்தோர்......................ஆவர்.**

அ) சாதவாகனர்கள் ஆ) சோழர்கள்

இ) களப்பிரர்கள் ஈ) பல்லவர்கள் **விடை : இ) களப்பிரர்கள்**

**4. சங்க கால நிர்வாக முறையில் மிகச் சிறிய நிர்வாக அமைப்பு...............**

அ) மண்டலம் ஆ) நாடு

இ) ஊர் ஈ) பட்டினம் **விடை : இ) ஊர்**

**5. குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் தொழில் யாது ?**

அ) கொள்ளையடித்தல் ஆ) ஆநிரை மேய்த்தல்

இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல் ஈ) வேளாண்மை

**விடை : இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல்**

---

**II. கூற்றை வாசிக்கவும், சரியான விடையை (✓) செய்யவும்.**

**1. கூற்று: புலவர்களின் குழுமம் சங்கம் என அறியப்பட்டது.**

**காரணம் : சங்க இலக்கியங்களின் மொழி தமிழாகும்.**

அ. கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ. கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

இ. கூற்று சரி; காரணம் தவறு.

ஈ. கூற்றும் காரணமும் தவறானவை.

**விடை : அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.**

**2. கீழ்காணும் கூற்றுகளில் எவை உண்மையானவை அல்ல ?**

1. கரிகாலன் தலையாலங்கானம் போரில் வெற்றி பெற்றான்.
2. பதிற்றுப்பத்து சேர அரசர்கள் பற்றிய விவரங்களை வழங்குகின்றன.
3. சங்க காலத்தைச் சேர்ந்த பழைமையான இலக்கியங்கள் பெரும்பாலும் உரைநடையில் எழுதப்பட்டன.

அ. '1' மட்டும்

ஆ. '1 மற்றும் 3' மட்டும்

இ. '2' மட்டும்

**விடை : ஆ. '1 மற்றும் 3' மட்டும்**

**3. பண்டைக்காலத் தமிழகத்தின் நிர்வாகப் பிரிவுகள் ஏறுவரிசையில் இவ்வாறு அமைந்திருந்தது.**

அ. ஊர் < நாடு < கூற்றம் < மண்டலம்

ஆ. ஊர் < கூற்றம் < நாடு < மண்டலம்

இ. ஊர் < மண்டலம் < கூற்றம் < நாடு

ஈ. நாடு < கூற்றம் < மண்டலம் < ஊர்

**விடை : ஆ) ஊர் < கூற்றம் < நாடு < மண்டலம்**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**4. அரசவம்சங்களையும் அரச முத்திரைகளையும் பொருத்துக.**

அ. சேரர் – 1. மீன்
ஆ. சோழர் – 2. புலி
இ. பாண்டியர் – 3. வில், அம்பு

அ) 3, 2, 1 ஆ) 1,2,3 இ) 3,1,2 ஈ) 2,1,3

**விடை : அ) 3,2,1**

---

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வெண்ணி போரில் வெற்றி பெற்றது................................

**விடை : கரிகால் வளவன்**

2. சங்க காலத்து மிகப்பழமையான தமிழ் இலக்கண நூல்............................

**விடை : தொல்காப்பியம்**

3. காவிரியாற்றின் குறுக்கே கல்லணையை.................................கட்டினார்.

**விடை : கரிகாலன்**

4. படைத் தலைவர்....................என அழைக்கப்பட்டார்.

**விடை : தானைத் தலைவன்**

5. நில வரி.........................என அழைக்கப்பட்டது.

**விடை : இறை**

---

**IV. சரியா / தவறா**

1. சங்க காலத்தில் பாடல்களைப் பாடுவோர் இருளர் என அழைக்கப்பட்டனர்.

**விடை : தவறு**

2. சாதிமுறை சங்க காலத்தில் வளர்ச்சி பெற்றது.

**விடை : தவறு**

3. கிழார் என்பவர் கிராமத்தின் தலைவர் ஆவார்.

**விடை : சரி**

4. புகார் என்பது நகரங்களின் பொதுவான பெயர் ஆகும்.

**விடை : தவறு**

5. கடற்கரைப் பகுதிகள் மருதம் என அழைக்கப்பட்டன.

**விடை : தவறு**

---

**V. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ. தென்னர் | – | சேரர் |
| ஆ. வானவர் | – | சோழர் |
| இ. சென்னி | – | வேளிர் |
| ஈ. அதியமான் | – | பாண்டியர் |

**விடை :**

| | | |
|---|---|---|
| **அ. தென்னர்** | **–** | **பாண்டியர்** |
| **ஆ. வானவர்** | **–** | **சேரர்** |
| **இ. சென்னி** | **–** | **சோழர்** |
| **ஈ. அதியமான்** | **–** | **வேளிர்** |

TNPSCJOB



**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

**1. பண்டைக்காலத் தமிழகத்தின் வரலாற்றை மறுகட்டுமானம் செய்ய உதவும் இரு இலக்கியச் சான்றுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. தொல்காப்பியம், 2. எட்டுத் தொகை

**2. நடுகல் அல்லது வீரக்கல் என்றால் என்ன ?**

H பண்டைக்காலத் தமிழர்கள் போர்களத்தில் மரணமுற்ற வீரர்கள் மேல் பெரும் மரியாதை கொண்டிருந்தனர்.

H போரில் மரணமடைந்த வீரனின் நினைவைப் போற்றுவதற்காக நடுகற்கள் நடப்பட்டன.

H அக்கல் நடுகல் அல்லது வீரக்கல் எனப்படும்.

**3. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து திணைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. நெய்தல்
5. பாலை

**4. சங்க காலத்தோடு தொடர்புடைய இரு தொல்லியல் ஆய்விடங்களைக் குறிப்பிடுக.**

1. ஆதிச்சநல்லூர், 2. அரிக்கமேடு

**5. கடையெழு வள்ளல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

**கடையெழு வள்ளல்கள் :**

1. பாரி 2. காரி 3. ஓரி 4. பேகன் 5. ஆய் 6. அதியமான் 7. நள்ளி

**6. களப்பிரர் காலத்தைச் சேர்ந்த ஏதேனும் மூன்று தமிழ் இலக்கியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. யாப்பெருங்கலம் 2. சீவக சிந்தாமணி 3. குண்டலகேசி

**VII. கீழ்க் காண்பதற்கு விடையளிக்கவும்.**

**1. சங்க காலத்தில் பெண்களின் நிலை குறித்து விவாதிக்கவும்.**

H சமூக வாழ்வில் பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் இல்லை.

H கற்றறிந்த அறிவுக் கூர்மையுடைய பெண்கள் இருந்தனர்.

H நாற்பது பெண்புலவர்கள் வாழ்ந்து அரிய நூல்களை கொடுத்துச் சென்றுள்ளனர்.

H திருமணம் சொந்த விருப்பத்தை சார்ந்து அமைந்திருந்தது.

H 'கற்பு' பெண்களின் மிகச் சிறந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டது.

H பெற்றோரின் சொத்துக்களில் மகனும், மகளும் சமமான பங்கைப் பெற்றிருந்தனர்.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**VIII. உயர் சிந்தனை வினாக்கள் .**

**1. கரிகால் வளவன் மிகச் சிறந்த சோழ அரசனாகக் கருதப்படுகிறான் : நிறுவுக**

H சோழ அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் கரிகால் வளவன் ஆவார்.

H அவர் சேரர், பாண்டியர் மற்றும் அவர்களை ஆதரித்த பதினொன்று வேளிர் தலைவர்களின் கூட்டுப்படையை வெண்ணி எனும் சிற்றூரில் தோற்கடித்தார்.

H அவர் காடுகளை விளைநிலங்களாக மாற்றினார்.

H வேளாண்மையை மேம்படுத்துவதற்காகக் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார்.

H சோழர்களின் துறைமுகமான புகார் இந்தியப் பெருங்கடலின் பல பகுதிகளிலிருந்து வணிகர்களை அதன்பால் ஈர்த்தது.

H பட்டினப்பாலை எனும் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த நூல், கரிகால் வளவன் ஆட்சியின் போது அங்கு நடைபெற்ற வணிக நடவடிக்கைகள் பற்றிய விரிவான செய்திகளை வழங்குகிறது.

---

**2. களப்பிரர்களின் காலம் இருண்ட காலம் அல்ல, காரணங்கள் தருக.**

H களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி இரண்டரை நூற்றாண்டுகள் ஆட்சி செய்தனர்.

H அவர்களின் ஆட்சி குறித்து இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. இலக்கியச் சான்றுகள், தமிழ் நாவலர் சரிதை, யாப்பெருங்கலம், பெரியபுராணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

H சீவக சிந்தாமணி, குண்டலகேசி ஆகிய இரண்டும் இக்காலத்தில் எழுதப்பட்டவைகளாகும்.

H தமிழகத்தில் பௌத்தமும், சமணமும் முக்கியத்துவம் பெற்ற காலம் அது.

H சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய, மொழிகளின் அறிமுகத்தால் வட்டெழுத்து என்னும் புதிய எழுத்துமுறை உருவானது.

H பதினெண் கீழ் கணக்கைச் சேர்ந்த பல நூல்கள் இயற்றப்பட்டன.

H இக்காலத்தில் வணிகமும் வர்த்தகமும் தொடர்ந்து செழித்தோங்கின.

H எனவே களப்பிரர் காலமானது பொதுவாகச் சித்தரிக்கப்பட்டதைப் போன்று இருண்ட காலம் அல்ல.

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**IX. வரைபடம்.**

**1. தென்னிந்திய ஆறுகள் வரைபடத்தில் சேர, சோழ, பாண்டிய அரசுகளின் எல்லைகளைக் குறித்து, வர்ணம் தீட்டவும்.**





TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2. கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும் :**

அ. கொற்கை ஆ. காவிரிப்பூம்பட்டினம் இ. முசிறி
ஈ. உறையூர் உ. மதுரை




TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**X. வாழ்க்கைத் திறன்**

**1. பல்வகை நிலப்பரப்புக் காட்சிப் படங்களைச் சேகரித்து, ஒட்டி, அவை எந்தத் திணைப் பகுதியைச் சேர்ந்தவை என்பதைக் கண்டுபிடிக்கவும். அங்கு விளையும் முக்கியப் பயிர்கள், வாழும் மக்களின் தொழில் ஆகியவை பற்றி எழுதவும்.**




**குறிஞ்சி :**

**விளையும் பயிர்கள் :** குறிஞ்சிப் பூக்கள் , திணை
**தொழில் :** வேட்டையாடுதல் , திணை பயிரிடுதல் , தேன் சேகரித்தல்




**முல்லை :**

**விளையும் பயிர்கள் :** தேயிலை, பழங்கள்
**தொழில் :** ஆநிரை மேய்த்தல்




**மருதம் :**

**விளையும் பயிர்கள் :** நெல், கரும்பு
**தொழில் :** வேளாண்மை




**நெய்தல் :**

**விளையும் பயிர்கள் :** தென்னை மரம்
**தொழில் :** மீன் பிடித்தல், உப்பு உற்பத்தி




**பாலை :**

**விளையும் பயிர்கள் :** பயிர்கள் விளைவதில்லை
**தொழில் :** வீரச் செயல்கள்

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| பழந்தமிழ்க் காப்பியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. **விடை : சிலப்பதிகாரம் மணிமேகலை** | அரசருக்கு உதவிய இரண்டு குழுக்களின் பெயர்களைக் குறிப்பிடுக. **விடை : எண்பேராயம் ஐம்பெருங்குழு** | சங்க காலத்து பெண்பாற் புலவர்கள் இருவரின் பெயர்களைக் கூறு. **விடை : அவ்வையார், காக்கைப் பாடினியார்** |
| சங்க காலத்து மூன்று முக்கியத் துறைமுகங்களின் பெயர்களை எழுதுக. **விடை : முசிறி, தொண்டி, கொற்கை** | முத்தமிழில் எவை எல்லாம் அடங்கும் ? **விடை : இயல், இசை, நாடகம்** | சிலப்பதிகாரம்.......................... ஆல் எழுதப்பட்டது. **விடை : இளங்கோவடிகள்** |
| எந்தப் பாண்டிய அரசனோடு தலையாலங்கானம் தொடர்புடையது ? **விடை : நெடுஞ்செழியன்** | எந்தத்திணை மென்புலம் என்றழைக்கப்பட்டது ? **விடை மருதம்** | துறைமுகங்களில் இருந்த ஒளிவிளக்குக் கோபுரங்கள் ................................ என அழைக்கப்பட்டன. **விடை : கலங்கரை இலங்குசுடர்** |

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. சேர நாணயங்களில் ................சின்னம் பொறிக்கப்பட்டுள்ளன.**

அ) புலி ஆ) இரண்டு மீன்கள் இ) வில் அம்பு ஈ) தாமரை

**விடை : இ) வில் அம்பு**

**2. ...................நூல், கரிகாலனின் ஆட்சியின் போது நடைபெற்ற வணிக நடவடிக்கைகள் பற்றிய விரிவான செய்திகளை வழங்குகிறது.**

அ) பதினெண் கீழ்க்கணக்கு ஆ) எட்டுத் தொகை

இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை

**விடை : அ) பதினெண் கீழ்க்கணக்கு**

**3. பாண்டிய நாடு .......................புகழ் பெற்றதாகும்.**

அ) மீன் பிடித்தல் ஆ) வேளாண்மை

இ) வேட்டையாடுதல் ஈ) முத்துக்குளிப்புக்கு

**விடை : ஈ) முத்துக்குளிப்புக்கு**

**4. பாலை மக்களின் கடவுள்..................................**

அ) முருகன் ஆ) இந்திரன் இ) வருணன் ஈ) கொற்றவை

**விடை : ஈ) கொற்றவை**

**5.ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி எழுதிய நூல்..............................**

அ) இயற்கை வரலாறு ஆ) இண்டிகா

இ) கடற்பயணம் ஈ) புது உலகம்

**விடை : ஈ) புது உலகம்**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



# புவியியல்

## அலகு 1. ஆசியா மற்றும் ஐரோப்பா

### மனவரைபடம்

| ஆசியா | ஐரோப்பா |
|---|---|
| மிகப்பெரிய கண்டம் | சிறிய கண்டம் |
| **பரவல்** | **பரவல்** |
| 10° 11' தெ முதல் 81° 12' அட்சம் வரை | 34° 51' வ முதல் 81° 47' வ அட்சம் வரை |
| **அமைவிடம்** | **அமைவிடம்** |
| கிழக்கு அரைக்கோளம் | புவியின் மையப்பகுதி |
| **பிரிக்கும் நீர்ச்சந்தி** | **பிரிக்கும் நீர்ச்சந்தி** |
| பேரிங் | ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி |
| **தீபகற்பங்கள்** | **தீபகற்பங்கள்** |
| அரேபியா, இந்தோ–சீனா, இந்தியா, கொரியா | ஸ்காண்டிநேவியன், ஐபீரியன், இத்தாலி, பால்கன் |
| **கடப்பது** | **கடப்பது** |
| நிலநடுக்கோடு, கடகரேகை, ஆர்டிக் வட்டம் | ஆர்டிக் வட்டம் |
| **கோடைக்கால மழை** | **குளிர்கால மழை** |
| தெற்கு ஆசியா | தெற்கு ஐரோப்பா |
| **பாலைவனங்கள்** | **பாலைவனங்கள்** |
| வெப்ப மற்றும் குளிர் | இல்லை |
| **கனிமம்** | **கனிமம்** |
| அதிகம் | குறைவு |
| **பயிர்கள்** | **பயிர்கள்** |
| தேயிலை, ரப்பர், பேரீச்சம்பழம் | சிட்ரஸ், ஆலிவ், திராட்சை |
| **தொழில்** | **தொழில்** |
| முதல்நிலை | இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை |

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**பயிற்சிகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஆசியாவின் மேற்கு எல்லையில் இல்லாதது எது ?**

(அ) கருங்கடல் (ஆ) மத்திய தரைக்கடல்

(இ) செங்கடல் (ஈ) அரபிக்கடல் **விடை : (ஈ) அரபிக்கடல்**

**2. எல்பர்ஸ் மற்றும் ஜாக்ரோஸ் இடையில் அமைந்துள்ள மலையிடைப் பீடபூமி**

(அ) திபெத் (ஆ) ஈரான்

(இ) தக்காணம் (ஈ) யுனான் **விடை : (ஆ) ஈரான்**

**3. நிலநடுக்கோட்டுக் காலநிலை என்பது**

(i) ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும்.

(ii) சராசரி மழையளவு 200 மி.மீ ஆகும்.

(iii) சராசரி வெப்பலை 10°C ஆகும்.

மேற்கண்ட கூற்றுகளில்

(அ) (i) மட்டும் சரி (ஆ) (ii) மற்றும் (iii) சரி

(இ) (i) மற்றும் (iii) சரி (ஈ) (i) மற்றும் (ii) சரி **விடை : (அ) (i) மட்டும் சரி**

**4. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. மலேசியா | 1. அத்தி |
| B. தாய்லாந்து | 2. ரப்பர் |
| C. கொரியா | 3. தேக்கு |
| D. இஸ்ரேல் | 4. செர்ரி |

**குறியீடுகள்**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 4 | 1 |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 2 | 3 | 1 | 4 |

**விடை :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 4 | 1 |

**5. இந்தியா .................. உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது.**

(அ) துத்தநாகம் (ஆ) மைக்கா

(இ) மாங்கனீசு (ஈ) நிலக்கரி **விடை : (ஆ) மைக்கா**

**6. ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ்க்கு இடையில் இயற்கையாகவே அமைந்துள்ள எல்லை**

(அ) ஆல்ப்ஸ் (ஆ) பைரனீஸ்

(இ) கார்போதியன் (ஈ) காகஸஸ் **விடை : (ஆ) பைரனீஸ்**

**7."ஐரோப்பாவின் மேற்கு மற்றும் வடமேற்கு பகுதியில் மிதமான மற்றும் ஈரப்பதமான காலநிலை நிலவுகிறது" சரியான தெரிவினைத் தேர்வு செய்க.**

(அ) இந்தப் பகுதிகள் நிலநடுக்கோட்டிற்கு அருகில் அமைந்துள்ளது.

(ஆ) இப்பகுதிகள் வட அட்லாண்டிக் வெப்ப நீரோட்டத்தினால் பாதிக்கப்படுகின்றன.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



(இ) இப்பகுதிகளைச் சுற்றி மலைகள் காணப்படுகின்றன.
(ஈ) மேற்கண்ட அனைத்தும் சரி.

**விடை: (ஆ) இப்பகுதிகள் வட அட்லாண்டிக் வெப்ப நீரோட்டத்தினால் பாதிக்கப்படுகின்றன**

**8. கீழ்க்கண்டவற்றுள் எது தவறான கூற்று எது ?**

(அ) ஐரோப்பா மின்சக்தியை அதிக அளவில் உற்பத்தி செய்கிறது.
(ஆ) ஐரோப்பாவின் அனைத்து ஆறுகளும் ஆல்ப்ஸ் மலையில் உற்பத்தியாகின்றன.
(இ) ஐரோப்பாவின் பெரும்பாலான ஆறுகள் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன.
(ஈ) ஐரோப்பாவின் ஆறுகள் வற்றாத ஆறுகளாகும்.

**விடை: (ஆ) ஐரோப்பாவின் அனைத்து ஆறுகளும் ஆல்ப்ஸ் மலையில் உற்பத்தி ஆகின்றன.**

**9.பொருந்தாத இணையைக் கண்டறிக.**

(அ) மெஸடா – ஸ்பெயின்
(ஆ) ஜுரா – பிரான்ஸ்
(இ) பென்னின்ஸ் – இத்தாலி
(ஈ) கருங்காடுகள் – ஜெர்மனி **விடை :(இ) பென்னின்ஸ் – இத்தாலி**

**10. ஐரோப்பாவில் மிகக் குறைவான மக்களடர்த்தியைக் கொண்ட நாடு எது ?**

(அ) ஐஸ்லாந்து (ஆ) நெதர்லாந்து
(இ) போலந்து (ஈ) சுவிட்சர்லாந்து **விடை : (அ) ஐஸ்லாந்து**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தாரஸ் மற்றும் போன்டிக் மலைத்தொடர்கள் ............... முடிச்சிலிருந்து பிரிக்கின்றது. **விடை : ஆர்மீனியன்**
2. உலகின் மிக ஈரப்பதமான இடம் .................. **விடை : மௌசின்ராம்**
3. உலகிலேயே .................... உற்பத்தியில் ஈரான் முன்னிலையில் உள்ளது. **விடை : பேரீச்சம்பழம்**
4. ஐரோப்பாவையும், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவையும் இணைக்கும் கடல்வழி .................... **விடை : சூயஸ் கால்வாய்வழி**
5. பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய நடனம்..................... **விடை : டினிக்லிங்**
6. ஐரோப்பாவின் இரண்டாவது உயரமான சிகரம் .................... **விடை : மாண்ட் பிளாங்க்**
7. ஐரோப்பாவின் மத்திய மற்றும் கிழக்கு பகுதியில் நிலவும் காலநிலை ................ **விடை : கண்டகாலநிலை**
8. வடகடலில் உள்ள முக்கிய மீன்பிடித்தளம்.................... **விடை : டாகர் பாங்க்ஸ்**
9. ஐரோப்பாவின் மக்களடர்த்தி................... **விடை : ஒரு சதுர கிலோமீட்டருக்கு 34 நபர்கள்**
10. .................... ஆறு ஐரோப்பாவில் உள்ள ஒன்பது நாடுகளைக் கடந்து செல்கின்றது. **விடை : டான்யூப்**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | மெசபடோமியா சமவெளி | – அதிக மழை |
| 2. | மௌசின்ராம் | – நார்வே |
| 3. | அரிசிக் கிண்ணம் | – ஸ்பெயின் |
| 4. | ஃபியார்டு கடற்கரை | – யூப்ரடீஸ் & டைக்ரிஸ் |
| 5. | எருதுச் சண்டை | – தாய்லாந்து |

**விடை :**

| | | |
|---|---|---|
| 1. | மெசபடோமியா சமவெளி | – யூப்ரடீஸ் & டைக்ரிஸ் |
| 2. | மௌசின்ராம் | – அதிக மழை |
| 3. | அரிசிக் கிண்ணம் | – தாய்லாந்து |
| 4. | ஃபியார்டு கடற்கரை | – நார்வே |
| 5. | எருதுச் சண்டை | – ஸ்பெயின் |

**IV. மேலும் கற்கலாம்.**

**1. கூற்று(A):** இத்தாலி, வறண்ட கோடை காலத்தையும், குளிர்கால மழையையும் பெற்றுள்ளது.

**காரணம் (R):** இது மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ளது.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கம் ஆகும்.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமல்ல

இ) (A) சரி, ஆனால் (R) தவறு

ஈ) (A) தவறு, ஆனால் (R) சரி

**விடை : ஈ) (A) தவறு, ஆனால் (R) சரி**


**2. கொடுக்கப்பட்ட ஆசியா வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள 1, 2, 3 மற்றும் 4 என்பன கீழ்க்கண்ட சமவெளிகளைக் குறிக்கின்றன.**

A. சிந்து – கங்கை சமவெளி

B. மஞ்சூரியன் சமவெளி

C. மெசபடோமியா சமவெளி

D. சீனச் சமவெளி.




வரைபடத்தில் உள்ள எண்ணுடன் சமவெளிகளைப் பொருத்தி, பின் கீழே கொடுக்கப்பட்ட குறியீட்டைப் பயன்படுத்தி சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

TNPSCJOB



**குறியீடுகள்**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 1 | 4 | 3 |
| ஆ) | 2 | 1 | 3 | 4 |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 1 | 4 | 3 | 2 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **விடை : ஆ)** | 2 | 1 | 3 | 4 |

**2. கொடுக்கப்பட்டுள்ள ஆசியா வரைபடத்தில் நிழலிடப்பட்ட பகுதியில் விளையும் பயிர்வகை.**

அ) கரும்பு
ஆ) பேரீச்சம் பழம்
இ) ரப்பர்
ஈ) சணல்



ஆசியா

**விடை : ஆ) பேரீச்சம் பழம்**

**V. சுருக்கமாக விடையளி :**

**1. ஆசியாவில் உள்ள முக்கிய மலையிடைப் பீடபூமிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

**ஆசியாவில் உள்ள முக்கிய மலையிடைப் பீடபூமிகள் :**

1. அனடோலிய பீடபூமி (போன்டைன் – டாரஸ் மலை)
2. ஈரான் பீடபூமி (எல்பர்ஸ் – ஜாக்ரோஸ்)
3. திபெத்திய பீடபூமி (குன்லுன் – இமய மலை)

**2. "மான்சூன் காலநிலை" பற்றிச் சுருக்கமாக எழுதுக.**

✶ ஓர் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் நேர் எதிர் திசைகளில் வீசும் பருவக் காற்றுகள் மான்சூன் காலநிலை எனப்படும்.

✶ கோடைக்காலப் பருவமழைக் காற்றுகள் இந்தியா, வங்காளதேசம், இந்தோ–சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் தெற்கு சீனா ஆகிய இடங்களுக்கு அதிக மழைப்பொழிவைத் தருகின்றன.

**3. நிலத்தோற்றங்கள் ஆசியாவின் மக்கள் தொகை பரவலை எவ்வாறு பாதிக்கின்றது ?**

✶ ஆற்றுச் சமவெளிகள் அதிக மக்கள் தொகை பரவலை அதிகரிக்கின்றது.

✶ பாலைவனப்பகுதிகள் அதிக மக்கள் தொகை பரவலை பாதிக்கின்றது.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**4. ஆசியாவில் காணப்படும் முக்கிய துறைமுகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

**ஆசியாவில் காணப்படும் முக்கிய துறைமுகங்களின் பெயர்கள் :**

1. டோக்கியோ 5. சென்னை
2. ஷங்காய் 6. மும்பை
3. சிங்கப்பூர் 7. கராச்சி
4. ஹாங்காங் 8. துபாய்

**5." வேறுபாடுகளின் நிலம் ஆசியா" – நிரூபி**

✶ உலகின் மிகப்பெரிய கண்டம் ஆசியாவாகும்.

✶ அது மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள், விரிகுடாக்கள், தீவுகள் போன்ற பல்வேறுபட்ட நிலத் தோற்றங்களைக் கொண்டது.

✶ நிலநடுக்கோட்டிலிருந்து துருவப் பகுதி வரை பல்வேறு காலநிலைகளை உள்ளடக்கியது.

✶ பல இனங்கள், மொழிகள், சமயங்கள் மற்றும் கலாச்சாரங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் இடமாகத் திகழ்கின்றது.

✶ எனவே ஆசியா கண்டம், "வேறுபாடுகளின் நிலம்" என அழைக்கப்படுகின்றது.

**6. ஆல்பைன் மலைத்தொடரில் உள்ள முக்கிய மலைகள் யாவை ?**

**ஆல்பைன் மலைத்தொடரில் உள்ள முக்கிய மலைகள் :**

1. சியாரா நெவேடா 5. டினாரிக் ஆல்ப்ஸ்
2. பைரினீஸ் 6. காகசஸ்
3. ஆல்ப்ஸ் 7. கார்போதியன்
4. அப்னின்ஸ்

**7. ஐரோப்பாவின் முக்கிய ஆறுகள் யாவை ?**

**ஐரோப்பாவின் முக்கிய ஆறுகள் :**

1. வோல்கா 5. ரோன்
2. டான்யூப் 6. போ
3. நீப்பர் 7. தேம்ஸ்
4. ரைன்

**8. ஐரோப்பாவில் மத்திய தரைக்கடல் காலநிலையைக் கொண்ட நாடுகளின் பெயர்கள் சிலவற்றைக் கூறுக.**

**ஐரோப்பாவில் மத்திய தரைக்கடல் காலநிலையைக் கொண்ட நாடுகளின் பெயர்கள் :**

1. ஸ்பெயின் 2. பிரான்ஸ்
3. இத்தாலி 4. சுவிச்சர்லாந்து

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**9. ஐரோப்பாவின் மக்கள் தொகையைப் பற்றிச் சிறுகுறிப்பு தருக.**

✶ ஆசியா, ஆப்பிரிக்காவைத் தொடர்ந்து உலகின் மூன்றாவது மிக அதிக மக்கள் தொகையைக் கொண்டது ஐரோப்பா ஆகும்.

✶ 2018 ஆம் ஆண்டில் 742 மில்லியனாக இருந்த ஐரோப்பாவின் மக்கள் தொகை, உலக மக்கள் தொகையில் 9.73 சதவிகிதமாகக் காணப்பட்டது.

✶ ஐரோப்பிய மக்கள் அடர்த்தி ஒரு சதுரகிலோமீட்டருக்கு 34 நபர்கள் ஆகும்.

**10. ஐரோப்பாவில் கொண்டாடப்படும் விழாக்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடு.**

**ஐரோப்பாவில் கொண்டாடப்படும் விழாக்கள் :**

✶ கிறிஸ்துமஸ்
✶ ஈஸ்டர்
✶ புனித வெள்ளி
✶ புனிதர்கள் நாள்
✶ ரெடன் டோர்
✶ டோமாட்டினா
✶ கார்னிவல்

**VI. வேறுபடுத்துக.**

**1. மலையிடைப் பீடபூமி மற்றும் தென் பீடபூமி**

| மலையிடைப் பீடபூமி | தென் பீடபூமி |
|---|---|
| மலையிடைப் பீடபூமிகள் பாமீர் மற்றும் ஆர்மீனியன் முடிச்சிலிருந்து பிரிந்து செல்லும் மலைத்தொடர் களிடையே காணப்படுகின்றன. | தெற்கு பீடபூமிகள், வடக்கு பீடபூமிகளைக் காட்டிலும், உயரம் குறைந்து காணப்படுகின்றன. |
| எ.கா : அனடோலிய பீடபூமி, ஈரான் பீடபூமி, திபெத்திய பீடபூமி, | எ.கா : அரேபிய பீடபூமி, தக்காண பீடபூமி, ஷான் பீடபூமி, யுனான் பீடபூமி |

**2. வெப்பப் பாலைவனம் மற்றும் குளிர் பாலைவனம்**

| வெப்பப் பாலைவனம் | குளிர் பாலைவனம் |
|---|---|
| அரேபிய (சௌதி அரேபிா) மற்றும் தார் (இந்தியா மற்றும் பாகிஸ்தான்) பாலைவனங்கள் மிக வெப்பமான பாலைவனங்கள் ஆகும். | கோபி மற்றும் தக்லாமக்கன் பாலைவனங்கள் மிகவும் குளிர்ந்த பாலைவனங்கள் ஆகும். |

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**3. தூந்திரா மற்றும் டைகா.**

| தூந்திரா | டைகா |
|---|---|
| ஆர்டிக் மற்றும் வடஸ்காண்டினேவிய உயர்நிலங்கள் தூந்திர வகை இயற்கைத் தாவரங்களைக் கொண்டுள்ளன | தூந்திரப்பிரதேசத்தின் தெற்கில் அமைந்துள்ள நார்வே, சுவீடன், பின்லாந்து, ஜெர்மனி, போலந்து மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் ஊசியிலை அல்லது டைகா காடுகள் காணப் படுகின்றன |
| இங்குலிச்சன்ஸ் மற்றும் பாசி வகைகள் காணப்படுகின்றன. | பைன், ஃபிர், ஸ்புரூஸ் மற்றும் லார்ச் போன்ற முக்கிய மர வகைகள் காணப்படுகின்றன. |

**4. வடமேற்கு மேட்டு நிலம் மற்றும் ஆல்பைன் மலைத்தொடர்.**

| வடமேற்கு மேட்டு நிலம் | ஆல்பைன் மலைத்தொடர் |
|---|---|
| நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, ஸ்காட்லாந்து மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகளின் மலைகள் மற்றும் பீடபூமிகளை உள்ளடக்கியது. | ஆல்பைன் மலைத்தொடர் தெற்கு ஐரோப்பிய பகுதியில் காணப்படும் தொடர்ச்சியான இளம் மடிப்பு மலைகள் ஆகும். |
| இதுமிக அழகிய பிளவுபட்ட கடற்கரையினைக்கொண்டது. | பைரனீஸ் மலைகள் ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக் கிடையில் இயற்கை எல்லையாக விளங்குகின்றன. |

**VII. காரணம் தருக.**

**1. ஆசியா, அரிசி உற்பத்தியில் முன்னணியில் உள்ளது.**

✶ அதிக மழைப்பொழிவு, செழுமை வாய்ந்த சமவெளிகள் மற்றும் மனிதவளம் ஆகியவற்றைப் பெற்றிருப்பதால் பருவமழை பெய்யும் ஆசியப் பகுதிகள் நெல் விளைய ஏற்ற பகுதிகளாகத் திகழ்கின்றன.

**2. ஆசியா உலகின் மிகப்பெரிய மற்றும் அதிக மக்கள் தொகை கொண்ட கண்டமாகும்.**

✶ பல்வேறுபட்ட இயற்கைக் கூறுகளினால் ஆசியாவின் மக்கட்பரவல் சீரற்றுக் காணப்படுகின்றது.

**3. ஐரோப்பா "மிகப்பெரிய தீபகற்பம் " என அழைக்கப்படுகிறது.**

✶ ஐரோப்பா வடக்கே ஆர்டிக் பெருங்கடல்,தெற்கில் கருங்கடல் மற்றும் மத்திய தரைக்கடல், மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் கிழக்கே யூரல் மலைகள் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது.

✶ எனவே, இது ஒரு மிகப்பெரிய தீபகற்பம் என அழைக்கப்படுகிறது.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**4. மேற்கு ஐரோப்பாவானது உயர் அட்சப் பகுதியில் அமைந்திருந்தாலும் மிதமான காலநிலையைப் பெற்றுள்ளது.**

✶ வட அட்லாண்டிக் வெப்பக்கடல் நீரோட்டம் ஐரோப்பாவின் மேற்குப் பகுதிக்கு மிதமான வெப்பத்தை அளிக்கின்றது.

---

**VIII. ஒரு பத்தி விடையளி :**

**1. ஆசியாவின் வடிகால் அமைப்பைப் பற்றி விவரி.**

**<u>ஆசியாவின் வடிகால் அமைப்பு :</u>**

✶ ஆசியாவின் பெரும்பான்மையான ஆறுகள் மத்திய உயர்நிலங்களில் தோன்றுகின்றன.

✶ ஒப், எனிசி, லேனா ஆகிய முக்கிய ஆறுகள் வடக்கு நோக்கிப் பாய்ந்து ஆர்டிக் பெருங்கடலில் கலக்கின்றன.

✶ இவை குளிர்காலத்தில் உறைந்து விடுகின்றன.

✶ தெற்காசியாவில் பாயும் ஆறுகளான பிரம்மபுத்திரா, சிந்து, கங்கை, ஐராவதி ஆகிய வற்றாத ஆறுகள் பனிபடர்ந்த உயர்ந்த மலைகளில் தோன்றுகின்றன.

✶ இவை குளிர்காலத்தில் உறைவதில்லை.

✶ யூப்ரடிஸ் மற்றும் டைகிரிஸ் ஆறுகள் மேற்று ஆசியாவில் பாய்கின்றன.

✶ அமூர், ஹோவாங்கோ, யாங்சி மற்றும் மீகாங் ஆகிய ஆறுகள் ஆசியாவின் தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் பாய்கின்றன.

✶ ஆசியாவின் மிக நீளமான ஆறு யாங்சி ஆகும்.

---

**2. ஆசியாவில் காணப்படும் முக்கிய தாதுக்களைப் பற்றி விவரி.**

**<u>ஆசியாவில் காணப்படும் முக்கிய கனிம வளங்கள் :</u>**

**1. இரும்புத் தாது :**

✶ சீனா, இந்தியா, துருக்கி, பிலிப்பைன்ஸ், மலேசியா, தாய்லாந்து, மியான்மர் மற்றும் பல நாடுகளும் இரும்புத்தாது வளத்தைக் கொண்டுள்ளன.

**2. நிலக்கரி :**

✶ ஆசியாவில் சீனா மற்றும் இந்தியா அதிகமாக நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடுகளாகத் திகழ்கின்றன.

**3. பெட்ரோலியம் :**

✶ சௌதி அரேபியா, குவைத், ஈரான், பஹ்ரைன், கத்தார் மற்றும் ஐக்கிய அரேபிய குடியரசு போன்றவை பெட்ரோலிய உற்பத்தி செய்யும் மேற்காசிய நாடுகளாகும்.

✶ தெற்கு சீனா, மலேசியா, புரூனே, இந்தோனேசியா, இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகள் பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் மற்ற நாடுகளாகும்.

**4. பாக்ஸைட் :**

✶ இந்தியா மற்றும் இந்தோனேசியா நாடுகளில் காணப்படுகின்றது.

**5. மைக்கா :**

✶ இந்தியா உலகிலேயே அதிக அளவில் மைக்காவினை உற்பத்தி செய்கின்றது.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**6. தகரம் :**

✶ மியான்மர், தாய்லாந்து, மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் தகரம் காணப்படுகின்றது.

---

**3. பிளவுபட்ட கடற்கரை என்றால் என்ன ? துறைமுகங்களை எவ்வாறு அது மோசமான காலநிலையில் இருந்து பாதுகாக்கின்றது ?**

**அ) ஃபியார்ட் (பிளவுபட்ட கடற்கரை) :**

✶ செங்குத்தான பாறைகளுக்கிடையே (பனியாற்றுச் செயல்பாடுகளின் காரணமாக) உள்ள குறுகிய, ஆழமான கடற்கரை பிளவுபட்ட கடற்கரை எனப்படும்.

**ஆ) பிளவுபட்ட கடற்கரை துறைமுகங்களை மோசமான காலநிலையில் இருந்து பின்வரும் வழிகளில் பாதுகாக்கிறது. அவை,**

✶ இவை காற்று எதிர்த்திசையிலிருந்து வீசினாலும் அதன் வேகத்தைக் குறைக்கிறது.

✶ கடல் அலைகளின் வேகத்தையும் இவை கட்டுக்குள் வைக்கின்றன.

---

**4. ஐரோப்பாவின் காலநிலைப் பிரிவுகளைப்பற்றி விவரி.**

✶ ஐரோப்பிய காலநிலை மிதவெப்பமண்டல காலநிலை முதல், துருவ காலநிலை வரை வேறுபட்டுக் காணப்படுகின்றது.

✶ ஐரோப்பாவின் தென்பகுதியில் காணப்படும் மத்திய தரைக்கடல் பகுதி காலநிலை மிதமான கோடைகாலமும், குளிர்கால மழையையும் கொண்டதாகும்.

✶ வட அட்லாண்டிக் நீரோட்டத்தினால் மேற்கு மற்றும் வடமேற்கு பகுதிகள் பொதுவாக லேசான, ஈரப்பதம் வாய்ந்த காலநிலையைக் கொண்டிருக்கும்.

✶ மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் காலநிலை ஈரப்பதம் வாய்ந்த கண்டகாலநிலை ஆகும்.

✶ துணை துருவ மற்றும் தூந்திரக் காலநிலை வடகிழக்கில் காணப்படுகின்றது.

✶ அட்லாண்டிக் பெருங்கடலிலிருந்து வீசுகின்ற மேற்கத்திய காற்றுகளின் மிதமான தாக்கத்திற்கு ஐரோப்பா முழுவதும் உட்படுகின்றது.

---

TNPSCJOB | www.tnpscjob.com


TNPSCJOB



**IX. படப்பயிற்சி :**

**ஆசியா வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

**ஆசியா :** யூரல்மலை, இமயமலை, பாமீர், கோபி பாலைவனம், அரேபியன் தீபகற்பம், தக்காண பீடபூமி, யாங்சி ஆறு, ஒப் ஆறு, ஏரல் கடல் மற்றும் பைகால் ஏரி.





TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

**ஐரோப்பா :** பைரீனிஸ், கருங்காடுகள், அப்பென்னிஸ், ஹங்கேரியன் சமவெளி, காகஸஸ் மலை, வோல்கா ஆறு, டானுப் ஆறு, ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி, லடோகா ஏரி, வடகடல்.




TNPSCJOB | www.tnpscjob.com


TNPSCJOB



# குடிமையியல்

## அலகு 1. மக்களாட்சி

### மனவரைபடம்




**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ஆதிமனிதன் ................ பகுதியில் குடியேறி விவசாயம் செய்யத் தொடங்கினான்.**

(அ) சமவெளி (ஆ) ஆற்றோரம்

(இ) மலை (ஈ) குன்று **விடை : (ஆ) ஆற்றோரம்**

**2. மக்களாட்சியின் பிறப்பிடம் ................**

(அ) சீனா (ஆ) அமெரிக்கா

(இ) கிரேக்கம் (ஈ) ரோம் **விடை : (இ) கிரேக்கம்**

**3. உலக மக்களாட்சி தினம் ................ ஆகும்.**

(அ) செப்டம்பர் 15 (ஆ) அக்டோபர் 15

(இ) நவம்பர் 15 (ஈ) டிசம்பர் 15 **விடை : (அ) செப்டம்பர் 15**

**4. நேரடி மக்களாட்சியில் வாக்களிப்பவர் ................**

(அ) ஆண்கள் (ஆ) பெண்கள்

(இ) பிரதிநிதிகள் (ஈ) வாக்காளர்கள் **விடை : (ஈ) வாக்காளர்கள்**

**II. நிரப்புக.**

1. நேரடி மக்களாட்சியைச் செயல்படுத்தும் நாடு ...............
**விடை : சுவிட்சர்லாந்து**

2. மக்களாட்சிக்கான வரையறையை வகுத்தவர் ...............
**விடை : ஆப்ரகாம் லிங்கன்**

3. மக்கள் ............... அளிப்பதன் மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். **விடை : வாக்கு**

4. நம் நாட்டில் ............... மக்களாட்சி செயல்படுகிறது.
**விடை : பிரதிநிதித்துவ**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**III. விடையளிக்கவும்.**

**1. மக்களாட்சி என்றால் என்ன ?**

"மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி"

**2. மக்களாட்சியின் வகைகள் யாவை ?**

1. நேரடி மக்களாட்சி 2. பிரதிநிதித்துவ மக்களாட்சி

**3. நேரடி மக்களாட்சி – வரையறு.**

**நேரடி மக்களாட்சி :** மக்கள் நேரடியாக ஆட்சி முறையிலும், சட்டம் இயற்றும் அதிகாரமும் பெற்றிருப்பார்கள்.

**4. பிரதிநிதித்துவ மக்களாட்சி – வரையறு.**

**பிரதிநிதித்துவ மக்களாட்சி :**

✶ மக்கள் நேரடியாக பங்கு பெறுவதை விடுத்து தங்கள் பிரதிநிதிகள் மூலம் பங்கு பெறுகின்றனர்.

✶ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தை உருவாக்கி நடத்துவர்.

**5. நம் அரசமைப்புச் சட்டத்தின் சிறப்புகளாக நீ புரிந்து கொள்வன யாவை ?**

✶ இந்தியர் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி பெறும் உரிமையை உறுதி செய்துள்ளது.

✶ மேலும் குடிமக்களுக்கான உரிமைகள், கடமைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளையும் நிர்ணயம் செய்துள்ளது.

**IV. உயர்சிந்தனை வினா.**

**1. நேரடி மக்களாட்சி, பிரதிநிதித்துவ மக்களாட்சி – ஒப்பீடு செய்து, வேறுபாடுகளை அறியவும்.**

| நேரடி மக்களாட்சி | பிரதிநிதித்துவ மக்களாட்சி |
|---|---|
| மக்கள் நேரடியாக ஆட்சிமுறையில் பங்கேற்பர். எ.கா : பண்டைய கிரேக்கம் | மக்கள் நேரடியாக பங்கு பெறுவதை விடுத்து தங்கள் பிரதிநிதிகள் மூலம் பங்கு பெறுகின்றனர். எ.கா: இந்தியா, அமெரிக்கா. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தை உருவாக்கி நடத்துவர். |
| மக்களே சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றிருப்பார்கள். | அதிகாரம் தலைவரிடம் குவிந்திருக்காது. மாறாக அவ்வதிகாரம் ஒரு குழுவிடம்தான் இருக்கும். |

TNPSCJOB



**V. செயல்பாடுகள் :**

**1. உங்கள் தொகுதி பிரதிநிதிகளின் பெயர்களைக் கேட்டறிந்து எழுதவும்.**

**அ) நாடாளுமன்ற உறுப்பினர்**

**ஆ) சட்டமன்ற உறுப்பினர்**

**இ) உள்ளாட்சி உறுப்பினர்**

✶ செயல்பாடுகள் : மாணவர்கள் தாங்களாகவே தங்கள் தொகுதி பிரதிநிதிகளின் பெயர்களைக் கேட்டறிதல் வேண்டும்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ................ அரசமைப்புச் சட்டம்தான் உலகில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்களிலேயே மிகப் பெரியது.**

(அ) கனடா (ஆ) சீனா

(இ) இலங்கை (ஈ) இந்தியா **விடை : (ஈ) இந்தியா**

**2. நமது "அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராக் .............. கருதப்படுகிறார் ".**

(அ) பண்டித நேரு (ஆ) மகாத்மா காந்தி

(இ) டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார்

(ஈ) இராஜேந்திர பிரசாத் **விடை : (இ) டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார்**

**3. உலகிலேயே முதன்முதலில் பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்த நாடு ..............**

(அ) அமெரிக்கா (ஆ) ஜப்பான்

(இ) இந்தியா (ஈ)நியூஸிலாந்து **விடை : (ஈ)நியூஸிலாந்து**

**II. குறுகிய விடையளி :**

**1. மக்களாட்சி முறையின் நிறை, குறைகளை விவாதிக்கவும்.**

**நிறைகள் :**

✶ பொறுப்பும், பதிலளிக்கும் கடமையும் கொண்ட அரசாங்கம்

✶ சமத்துவமும், சகோதரத்துவமும்

✶ தல சுய ஆட்சி

✶ மக்கள் இறையாண்மை

✶ மக்களிடையே பொறுப்புணர்ச்சி

**குறைகள் :**

✶ பிரதிநிதித்துவ முறை கொண்ட மக்களாட்சி

✶ குறைந்த வாக்குப் பதிவு

✶ நிலையற்ற அரசாங்கம்

✶ முடிவெடுக்கும் முறையில் காலதாமதம்

TNPSCJOB | www.tnpscjob.com

# செலக்சன்

## எங்கள் வெளியீடுகள் :

**3,4,5,6,7,8 - வகுப்புகளுக்கு**
**5 in 1 ( TM & EM )**

**6,7,8,9,10 - வகுப்புகளுக்கு**
**தமிழ், ஆங்கிலம்**
**முப்பருவம்**

**6,7,8,9,10 - வகுப்புகளுக்கு**
**கணக்கு, அறிவியல், சமூக அறிவியல்**
**முப்பருவம் - ( TM & EM )**

**(6,7,8) (9,10) - வகுப்புகளுக்கு**
**தமிழ் கட்டுரைக் கனிகள்**

**10 & 12 - வகுப்புகளுக்கு**
**வினா வங்கி ( TM & EM )**

**அன்பு நிலையம்**
மதுரை – 625001